**செய்தி வெளியீடு எண் : 2488** **நாள் : 11.12.2023**

# எண்ணூர் கிரீக் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் ஆய்வு

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தலைமையில் 2023 மே திங்களில் அமைக்கப்பட்ட மாநில எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மை தொடர்பான உயர்மட்டக் குழுவின் கூட்டம் இன்று (11.12.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர். இ.ஆ.ப., சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, இ.ஆ.ப., நீர் மேலாண்மைத் துறையின் கூடுதல் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., , காவல் துறையின் தலைமை இயக்குநர் திரு.அபாஷ் குமார், இ.கா.பா., சென்னை மாநகர காவல் ஆணையர் திரு.சந்தீப் ராய் ரத்தோர். இ.கா.பா., கடலோர காவல் படை தலைமை இயக்குநர் திரு.விஜயகுமார், இ.கா.பா., மற்றும் சென்னை பெட்ரோலிய கழகம், மணலி தொழிற்சாலைகள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

எண்ணூர் க்ரீக் பகுதி மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவின் அளவு குறித்து தலைமை செயலாளர் ஆய்வு செய்தார். அவ்வமயம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர் செயலாளர் தலைமையில், அண்ணா பல்கலைக்கழகம், நீரி, ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் கடலோரக் காவல் படை ஆகியவற்றின் நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில்நுட்பக் குழுவை 10.12.2023 அன்று சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அமைத்துள்ளதாக தலைமைச் செயலாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. நிபுணர் குழு விரிவான கள ஆய்வுகளை மேற்கொண்டு சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் வளாகத்திலிருந்து எண்ணெய் கசிவு, பாதுகாப்பு குளங்கள் மற்றும் மழை நீர் வடிகால் குளங்களில் இருந்து பக்கிங்ஹாம் கால்வாயில் நுழைந்து இறுதியாக எண்ணூர் கிரீக் ஓடையில் அடைந்ததாக முடிவு செய்தது. அருகில் உள்ள மீனவர் குடும்பங்களில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் நடத்திய கள ஆய்வில் எண்ணூர் க்ரீக் பகுதிகளில் கணிசமான எண்ணெய் படிவு இருப்பது தெரியவந்தது. பல கரையோர மீனவ சமுதாயத்தினரின் வீடுகளுக்குள் நுழைந்த எண்ணெய் கலந்த நீர், அவர்களின் தனிப்பட்ட உடைமைகளைப் பாதித்து அவர்களின் படகுகளில் எண்ணெய் படிந்து அவர்களின் வாழ்வாதாரத்தையும் மோசமாகப் பாதித்துள்ளது. எண்ணெய் கசிவினால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்யுமாறு சென்னை மாவட்ட ஆட்சியருக்கும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை கவனத்தில் கொண்டு, நிபுணர்கள் வழிகாட்டுதலின் கீழ் தேவையான ஆட்கள் மற்றும் இயந்திரங்களுடன் போர்க்கால அடிப்படையில் எண்ணெயை அகற்றும் பணிகளை விரைந்து

மேற்கொள்ளுமாறு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் எண்ணெய் கசிவை நீக்குவதற்கு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பணிகளை விரைவாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. தோல் நோய் மருத்துவர்களின் துணையோடு தேவைப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்பு மருத்துவர் குழுவை நியமித்துள்ளது. மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்யும் பணி மீன்வளத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையும் இப்பகுதியில் எண்ணெய் கசிவினால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பீடு செய்து வருகிறது. கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் கால்நடைகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிப்பதற்காக சிறப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளது. எண்ணெய் கசிவினை நீக்குவதற்கு விதிகளின்படி தகுந்த தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கடலோர காவல் படை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது–

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் 33(A) விதியின்படி நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதியில் கூறப்பட்டுள்ளபடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஏற்கனவே உயர் அலுவலர்கள் குழுவை நியமித்து உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் உள்ளிட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களில் இருந்து எண்ணெய் படிவங்களை நீக்குவதில் அனுபவம் பெற்ற முகமைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த முகமைகள் எண்ணெய் கசிவு முழுவதையும் உறிஞ்சி அகற்றுவதற்கு தேவையான சிறப்பு இயந்திரங்களை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 11.12.2023 அன்று எண்ணூர் கிரீக் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெயை அகற்றும் பணிகளில் தேவையான பொருட்களுடன் 20 படகுகளில் ஆட்களும் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வனம் மற்றும் வருவாய்த் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் குழு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து எண்ணெய் கசிவை அகற்றுதல் மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தும் பணியில் முனைந்துள்ளது. மாவட்ட அளவிலான எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மை கூட்டத்தை கூட்டுமாறு சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார். மாநில எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மைக் குழு, எண்ணெய் அகற்றுதல் மற்றும் நிவாரணப் பணிகள் முடிவடையும் வரை தினமும் இப்பணிகளை கண்காணிக்கவும் முடிவு செய்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in